பள்ளியின் வரலாறு

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து வியாபாரம் காரணமாக சென்னை வந்து அயன்புரத்தில் குடியேறிய நாங்கள் பொது சுகாதாரம் பேணும் பொருட்டு ஒரு பொதுக் கிணறு தேவை எனக் கருதி 1950 ஏப்ரல் திங்கள் 15-ம் நாள் ஒன்று கூடி நந்தவனம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்து "அயன்புரம் நாடார் உறவின்முறை நந்தவன அவிவிருத்திக் கமிட்டி" என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினோம். இந்த அமைப்பு நாடார் குலப்பெருமக்களின் முன்னோர்கள் நடத்தி வந்த மகமை முறையைப் பின்பற்றி வந்தது.அவ்வமைப்பை மூன்று மாதங்களுக்குப் பின் "அயன்புரம் நாடார் உறவின் முறைச்சங்கம்" என மாற்றிக் கொண்டோம். இந்த முறையால் ஒற்றுமை, ஒழுங்கு, கட்டுப்பாடு, கூடிப்பழகும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் கிட்டியது. இந்த அமைப்பு முதலில் 18 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பித்து இப்பொழுது 200-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாக இயங்கி வருகிறது. சங்கத்தின் முதல் நோக்கமான நந்தவனம் அமைப்பதற்குச் சந்தா மூலம் கிடைத்த பணமும், பெரியோர்கள் கொடுத்த நன்கொடையும் சேர்த்து 19-9-1951ல் 4441 ரூபாயில் மூன்றரை கிரவுண்டு இடம் வாங்கப்பட்டது. பின்பு சங்க நிர்வாகிகளின் விடாமுயற்சியாலும் மேலும் வள்ளல்கள் கொடுத்த நன்கொடையாலும் பெரிய கிணறு ஒன்று வெட்டி,

நந்தவனம் அமைத்து, சங்கத்திற்கு ஆறாவது ஆண்டு சங்கக் கட்டிடத்தை விருதுநகர் திரு.V.V.இராமசாமி நாடார் எம்.எல்.சி., அவர்கள் தலைமையில் மதுரை நாடார் மஹாஜன சங்கப் பொதுச் செயலாளர் திரு.ப.ரா.முத்துசாமி நாடார் அவர்கள் திறந்து வைத்தார்கள். சங்க ஆண்டுவிழா மதுரை திரு.கே.பி.எஸ்.வி.ஆர்.குருசாமி நாடார் பி.ஏ., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நமது சமூகப் பெரியாரும் முற்போக்கு எண்ணம் கொண்டவரும் நாடு நலம்பெற நல்ல பல காரியங்கள் ஆற்றியவரும், கல்விக்காக காலமெல்லாம் பாடுபட்டவருமான பட்டிவீரன்பட்டி உயர்திரு. ஊ.பு.அ.சௌந்திரபாண்டியன் காலமானதை முன்னிட்டு, 1953 பிப்ரவரி 22-ம் நாளில் எங்கள் சங்கத் தலைவர் திரு.ப.தனுஷ்கோடி நாடார் அவர்களின் தலைமையில் ஓர் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது. அதன்பின் 22.2.1957ல் சங்கத் தலைவர் திரு.சி.ப.செல்லையா நாடார் அவர்களின் தலைமையில் 5வது ஆண்டு நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது.

அதே சமயம் திரு.S.T.M.சீனிவாசகம் அவர்கள் உயர்திரு. பாண்டியனாரின் சேவைகளைப் பாராட்டிப் பேசுகையில், அன்னாரின் பெயரால் நமது சங்கத்தின் சார்பில் ஒரு பள்ளியை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். முன் மாதிரியாக ரூ.11.00 நன்கொடையும் கொடுத்தார். உடனே சங்கத்தில் திரு.வ.சி.மாரியப்ப நாடார் அவர்களைத் தலைவராகக் கொண்ட 13-பேர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. உறுப்பினர்களிடமிருந்து உடனடியாக ரூபாய். 51.77 நன்கொடை வசூல் செய்து கல்வி நிதிக் கணக்கு ஏற்படுத்தப்பட்டது. அதன்பின்னர் சுமார் ஒன்றரை ஆண்டுகளில் திரு.S.இராஜன் நாடார்

அவர்களின் பெருமுயற்சியால் பள்ளி நடத்த 5.08.1958-ல் அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தது. "அயன்புரம் நாடார் உறவின்முறைச் சங்கத்திற்குப் பாத்தியமான ஊ.பு.அ. சௌந்திரபாண்டியன் இலவச ஆரம்பப்பள்ளி" என்ற பெயரால் ஆரம்பித்து, பள்ளியின் திறப்பு விழா 17.08.1958-ல் நடைபெற்றது. சென்னை மாநில சட்ட இலாகா காரியதரிசி திரு.A.அழகிரிசாமி நாயுடு எம்.ஏ., பி.எல்., அவர்களின் தலைமையில் ஓய்வு பெற்ற சென்னை கலெக்டர் திரு.தாயப்பத்தேவர் ஐ.ஏ.எஸ்., அவர்கள் திறந்து வைத்தார்கள். பிரபல தென்னிந்திய தொழில் அதிபர் திரு.A.M.M.முருகப்பச் செட்டியார் அவர்கள் பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

முதலில் 375 மாணவ மாணவியரையும் 8 ஆசிரியர்களையும் கொண்டு ஒரு ஆரம்பப்பள்ளியாகத் (Elementary School) துவக்கப்பட்ட இப்பள்ளி 1961-62ல் 1350 மாணவ மாணவியரைக் கொண்ட ஓர் உயர் ஆரம்பப்பள்ளியாக (HIGHER ELEMENTARY SCHOOL) வளர்ந்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 8-லிருந்து 29-ஆக உயர்ந்தது.

பின்னர் தமிழக அரசின் G.O.M.S.No. 831/1915-71-ன் படியும், கல்வி இயக்குனரின் ஆணை D.D.IS.No.109301 G 3170 31-05-71-ன் படியும், 1971-ஆம் ஆண்டு முதல் இப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக உயர்வு பெற்றது.

இந்நிலையில் பள்ளியின் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை பன்மடங்காக உயர்ந்ததுடன் ஆசிரியப் பெருமக்களின் எண்ணிக்கையும் 35-ஆக உயர்ந்தது.

இப்பள்ளியின் ஆரம்பப் பள்ளிக்கான கட்டிடத்தின் கீழ்ப்பகுதி முழுவதும் சங்கத்து உறுப்பினர்களின் விடா முயற்சியாலும், சென்னை வர்த்தகப் பிரமுகர்கள் அன்புடன் கொடுத்த நன்கொடையாலும் ரூபாய் ஒரு லட்சம் செலவில் கட்டிடம் கட்டப்பட்டது.

இவ்வாறே உயர்நிலைப் பள்ளிக்கு மாடிப்பகுதி முழுவதுமாக 25 வகுப்பறைகள் கொண்ட சிறந்த கட்டிடம் சுமார் ரூபாய் ஒரு லட்சம் செலவில் கட்டப்பட்டது.

பெருகி வரும் மாணவ மாணவியரின் எண்ணிக்கைக்கு ஏற்ப இட வசதி தேவைப்பட்டதால் பள்ளியின் கிழக்குப் பகுதியில் 10 கிரவுண்டு நிலத்தினை வாங்க முடிவு செய்து முன்பணமாக ரூ.10,000/-த்தினை 20.01.1974 அன்று செலுத்தி ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் 13.08.1974-ல் முழுத் தொகையாக ரூ. 1,15,000/-ம் செலுத்தி அந்நிலம் வாங்கப்பட்டது.

ரூ.25,000 செலவில் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது. 22 வகுப்பு அறைகளும் கட்டப்பட்டன.

உயர்நிலைப் பள்ளியாக மிகவும் சிறப்போடு இயங்கி வந்த இப்பள்ளி, பள்ளிக்கல்வி இயக்குநரின் R.L .No.72533 W 115/79 நாள் : 2.6.1979-ன் ஆணைப்படி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு மிக உன்னதமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. 1980-81ல் பள்ளியின் மேற்குப் பகுதியில் ரூ.32,000 செலவில் மூன்று வகுப்பறைகள் கட்டப்பட்டன.

பள்ளியில் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கும், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்கள் போதிக்கத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், கட்டிடத் தளவாட மான்யமாக ரூ.1,00,000/- (ஒரு லட்சம்) பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண் 1565021 WIO / நாள்: 01.9.1980ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கான ஆய்வுக்கூடக் கட்டிடம் பள்ளியின் நிர்வாகத்தினரால் மேலும் ரூபாய். 2லட்சம் செலவழித்து கிழக்குப்புறத்தில்